# செப்டம்பர் - 24 - பொதுக்கால 25ம் ஞாயிறு

## முதல் வாசகம் : ஏசாயா55: 6 - 9

ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள் அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி மன்றாடுங்கள்.கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக் அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும் அவர் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார் அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும் ஏனெனில் மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர்.என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல, என்கிறார் ஆண்டவர்.மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல உங்கள் வழிமுறைகளைவிட என் வழிமுறைகளும், உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன.

**பதில்பாடல் :** தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கின்றார்

## இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 1 : 20 – 24, 27

சகோதர சகோதரிகளே என்ன நேர்ந்தாலும் வெட்கமுற மாட்டேன். இன்றும் என்றும், வாழ்விலும் சாவிலும் முழுத்துணிவுடன் கிறிஸ்துவை என் உடலால் பெருமைப் படுத்துவேன். இதுவே என் பேராவல், இதுவே என் எதிர்நோக்கு. ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே் நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே.எனினும் நான் தொடர்ந்து வாழ்ந்தால் பயனுள்ள பணி செய்ய முடியும். எனவே நான் எதைத் தேர்ந்துகொள்வதென எனக்குத் தெரியவில்லை.இந்த இரண்டுக்குமிடையே ஒரு இழுபறி நிலையில் உள்ளேன். உயிர் நீத்துக் கிறிஸ்துவோடு இருக்க வேண்டும் என்னும் ஆவல் ஒரு புறம். - இதுவே மிகச் சிறந்தது.-ஆனால், இன்னும் வாழவேண்டும் என்பது மற்றொரு புறம். - இது உங்கள் பொருட்டு மிகத் தேவையாய் இருக்கின்றது.ஒன்றைமட்டும் மறந்துவிடாதீர்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுங்கள். நான் உங்களை வந்து பார்த்தாலும், நான் வரமுடியாத நிலையில் உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டாலும் நீங்கள் நற்செய்தியில் கொண்டுள்ள நம்பிக்கைக்காக ஒருமனத்தோடு போராடி, ஒரே உள்ளத்தோடு நிலைத்து நிற்கிறீர்கள் என்றும்,

## நற்செய்தி : மத்தேயு 20 : 1 – 16

அக்காலத்தில் இயேசு தம் சீடருக்குக் கூறிய உவமை: "விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் நிலக்கிழார் ஒருவர் தம் வேலையாள்களை வேலைக்கு அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்றார்.அவர் நாளொன்றுக்கு ஒரு தெனாரியம் கூலி என வேலையாள்களுடன் ஒத்துக்கொண்டு அவர்களைத் தம் திராட்சைத் தோட்டத்துக்கு அனுப்பினார். ஏறக்குறைய காலை ஒன்பது மணிக்கு அவர் வெளியே சென்ற பொழுது சந்தை வெளியில் வேறுசிலர் வேலையின்றி நிற்பதைக் கண்டார்.அவர்களிடம், "நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள் நேர்மையான கூலியை உங்களுக்குக் கொடுப்பேன்" என்றார்.அவர்களும் சென்றார்கள். மீண்டும் ஏறக்குறைய பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும் வெளியே சென்று அப்படியே செய்தார்.ஏறக்குறைய ஐந்து மணிக்கும் வெளியே சென்று வேறு சிலர் நிற்பதைக் கண்டார். அவர்களிடம், "நாள் முழுவதும் வேலை செய்யாமல் ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.அவர்கள் அவரைப் பார்த்து, "எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை" என்றார்கள். அவர் அவர்களிடம், "நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள்" என்றார்.மாலையானதும் திராட்சைத் தோட்ட உரிமையாளர் தம் மேற்பார்வையாளரிடம், "வேலையாள்களை அழைத்துக் கடைசியில் வந்தவர் தொடங்கி முதலில் வந்தவர்வரை அவர்களுக்குரிய கூலி கொடும்" என்றார்.எனவே ஐந்து மணியளவில் வந்தவர்கள் ஒரு தெனாரியம் வீதம் பெற்றுக் கொண்டனர்.அப்போது முதலில் வந்தவர்கள் தங்களுக்கு மிகுதியாகக் கிடைக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் அவர்களும் ஒரு தெனாரியம் வீதம் தான் பெற்றார்கள். அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டபோது அந்நிலக்கிழாருக்கு எதிராக முணுமுணுத்து, "கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணி நேரமே வேலை செய்தார்கள். பகல் முழுவதும் வேலைப் பளுவையும் கடும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணையாக்கி விட்டீரே" என்றார்கள்.அவரோ அவர்களுள் ஒருவரைப் பார்த்து, "தோழரே, நான் உமக்கு அநியாயம் செய்யவில்லை. நீர் என்னிடம் ஒரு தெனாரியம் கூலிக்கு ஒத்துக் கொள்ளவில்லையா?. உமக்குரியதைப் பெற்றுக் கொண்டு போய்விடும். உமக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவருக்கும் கொடுப்பது என் விருப்பம்.எனக்குரியதை நான் என் விருப்பப்படி கொடுக்கக் கூடாதா? அல்லது நான் நல்லவனாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?" என்றார்.இவ்வாறு கடைசியானோர் முதன்மையாவர். முதன்மையானோர் கடைசியாவர்" என்று இயேசு கூறினார்.

**தியானம்:** எமது வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் எதுவாக இருந்தாலும், எவ்வாறான பாவ வாழ்வு வாழ்ந்தாலும் ஆண்டவராகிய இயேசு எமது பாவங்களை மனிப்பார் என்று நம்பிக்கை கொண்டவர்களாக எந்த சூழ் நிலைகளிலும் இறைவனுக்கு நன்றி கூறி மகிமைப் படுத்தவேண்டுமென்றும், அவர் எங்களை அழைக்கும் பொழுது அவர் அழைப்பிற்கு செவிசாய்ப்போமானால் மற்றவர்கள் முன்னிலையில் எங்களை உயர்த்தி, எமக்கு நல்வாழ்வை அருள்வார் என்றும் இன்றைய வாசகங்கள் கூறுகின்றன. நாங்கள் வாழும் சமூகதில் நன்றி என்பதற்கு இடமேயில்லை மாறாக நண்பர்கள் மத்தியிலோ, உறவினர்கள் மத்தியிலோ எவராக இருந்தாலும் நன்றிக்கு பதிலாக சண்டைசச்சரவே காணப்படுகின்றது. இன்றைய நற்செய்தி வாசகத்தில் பார்ப்பது போன்று தோட்டக்காரர் நீண்ட நேரம் வேலை செய்த தனது தொழிலாளர்களுக்கு கொடுக்கும் சம்பளத்தைப் போன்று இறுதியாக வேலையற்று வீதியோரங்களில் இருந்தவர்களுக்கும் வேலை கொடுத்து அதே சம்பளத்தையே அவர்களுக்கும் கொடுத்தார். இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் இயேசுவின் முன்னிலையில் நீதிமான்களும் ஒன்றே பாவிகளும் ஒன்றே. எனவேதான் நீதிமான்களையல்ல பாவிகளையே தேடிவந்தேன் என்று இயேசு அழகாக வெளிப்படுத்துவதை வேதாகமத்தில் பார்க்கின்றோம். எனவே இன்றைய நாளில் நாங்கள் முடிவெடுப்போம். எமக்கு ஏற்படும் அனைத்து நல்லவைகளாக இருக்கலாம், தீயவைகளாக இருக்கலாம் எதுவாயினும் என்றும் இறைவனுக்கு நன்றி கூறி அவர் அழைப்பை ஏற்றுக்கொள்ள எங்களைத் தயார்படுத்துவோம்.